

ஒன்ராறியோ லிபரல் கட்சியினர் நாட்டுப் பொதுக் கல்வியினை மிகச் சிறந்த கல்வியாக அமைக்கத் திட்டம் ஒன்றினை ஆக்கியுள்ளனர். பொதுக் கல்விதான் எல்லாப் பிள்ளைகட்கும் நல்வாய்ப்பினை நல்கும் படியாகும். பொதுக் கல்வியில் முதன்மை அனைத்துலகப் பொருளாதாரத்தில் இன்றியமையாததொன்று. அது விருப்பத் தேர்விற்கு உரியதன்று.

## கல்வி

### சகலருக்கும் முதன்மை

- ஆரம்பக் கல்வி வகுப்புக்களின் எண்ணிக்கையினை இருபதிற்குள் அமைத்தல் - குறிப்பாக முதன் முறையாக ஆங்கிலம் கற்கும் பிள்ளைகளுக்காக.
- செலவு தாங்கக் கூடிய தரமான பிள்ளைப் பராமரிப்பு.
- சிறார்கட்குத் தேவையென்றால் வேண்டிய நேரத்தில் இரண்டாவது மொழி ஆங்கிலம் உதவப்பெறும்.
- 18 வயது வரை கட்டாயக் கல்வி.
- கண்ணியம், தற்கட்டுப்பாடு, சகிப்புத் தன்மை ஆகியவற்றைக் கற்பிக்கும் நற்குணநலம் நல்கும் கல்வி.
- 500 மில்லியன் டொலர் தனியார் கல்வி வரிக்கடன் தவணைச் சலுகையினை இரத்துச் செய்தல்.



இயங்கும் தூய்மையான பாதுகாப்பான பொதுமக்கள் குழுக்களுக்கென ஒன்ராறியோ லிபரல் கட்சி ஒரு திட்டம் வரைந்திருக்கின்றது. எங்களது காற்றினையும் தண்ணீரையும் நாங்கள் சுத்தம் செய்வோம். எங்கள் ஒன்றாறியோவின் பல்லின மரபினை போற்றுதல் செய்வோம். குற்றச் செயல்களை இல்லாமற் செய்து எங்கள் வீதிகளைப் பாதுகாப்பு மிகுந்ததாக்குவோம்.

## பலமான சமூகங்கள்

### தூய்மையாகவும் பாதுகாப்பாகவும் இயங்கும் சமூகங்கள்

- ஒன்ராறியோவிற்கு புதிதாக வருபவர்களைச் சிறந்த முறையில் குடியமர்தல்.
- நிலக்கரி எரித்தலால் ஆன ஆற்றல் இயந்திரங்களை மாற்றீடு செய்வதன் மூலம் தூய்மையான காற்றினைப் பெறுதல்.
- சுத்தமான பாதுகாப்பு மிக்க குடிநீர் வழங்குதல் - Walkerton இனிமேலும் இல்லை.
- அளவிற்கு மீறிய வாடகை அதிகரிப்பிலிருந்து வாடகை கொடுப்போரை பாதுகாத்தல்.
- குற்றச் செயல்களைத் தடுக்குமுகமாக ஆயிரம் (1000) புதிய காவல் நிலைய உத்தியோகத்தர்களை நியமித்தல்.
- மாகாணத்தினுள் வெறுப்பின அடிப்படையில் ஏற்படும் குற்றங்களை தடுக்கும் நிலையங்களை பரந்தளவில் அமைத்தல்.



ஒரு தொழிலினைக் கட்டி யெழுப்பவும், ஒரு குடும்பத்தினரைப் பேணவும் வட அமெரிக்காவிலேயே ஒன்ராறியோ திறமான இடமாக முடியும் அமையவும் வேண்டும். ஒன்ராறியோ முற்போக்காளர் (லிபரல்) பொருளாதார வளர்ச்சித் திட்டத்தினால் ”வரவு - செலவு” சமன் செய்யப்படும், வரிகள் குறைக்கப்படும், கூடிய தரமான வேலைகள் உருவாக்கப் பெறும், வாழ்க்கைத் தரம் உயர்வு உறும்.

## பொருளாதாரம்

### உள்ளார்ந்த ஆற்றலை அடைதல

- கிடைத்த மூளைப் பலத்தினை ஈடுபடுத்தல்.
- வெளிநாட்டு தொழிற்றுறை வல்லுனர்களை விரைவிலே வேலைத் திட்டத்தில் சேர்த்தல்.
- ஒன்ராறியோவினது பல்லின கட்டமைப்பின் பலத்துடன் முதலீடு செய்வதற்கு ஈர்ப்பு அளித்தல்.
- வரிகளைச் செவ்வனவே கையாண்டு வரவு செலவுத் திட்டத்தினைச் சமன் செய்தல்
- போதனைக் கட்டணத்தினைச் செயலறச் செய்து மேலும் 50000 கல்லூரி, சர்வ கலாச்சாலை வெற்றிடங்களை உருவாக்குதல்.
- செயன்முறைப் பயிற்சிக் காலத்தினை இரட்டித்தல்.
- ஏர்னிஈவ்ஸின் கூட்டுக் குழுவிற்கு உரிய 3.2 பில்லியன் டொலர் வரிச் சகாயத்தினை நீக்கி விடுதல்.
- தாங்க இயலுமான, நம்பிக்கை மிக்க மின்சாரம் பெற பொது மின்சார கூடத்தை அமைத்துத் தருவோம்.

## ஒன்ராறியோ லிபரல் கட்சியினது மாற்றத்திற்கான திட்டம்

மேலதிக தகவல்களைப் பெற அணுகவும்.:
**www.choosechange.ca**

ஒன்ராறியோ லிபரல் கட்சியினால் அதிகாரம் அளிக்கப் பெற்றது.



பொது சுகாதாரபராமரிப்புத் தான் சிறந்த சுகாதாரப் பராமரிப்பு என ஒன்றாறியோ லிபரல் கட்சியினர் நம்புகின்றனர். உங்களுக்குத் தேவையான கவனிப்பினை உரிய வேளையில் பெற எங்களின் திறமான சுகாதாரப் பராமரிப்புத் திட்டம் உறுதியளிக்கும். மருத்துவ வசதிகளை மேலும் பலமாக்கவும், நவீனமயப்படுத்தவும் வழி செய்வோம் தனியார் மயப்படுத்த மாட்டோம்.

## சுக நலன் பேணுதல்

### எங்களுக்குத் தேவையான சுகாதாரத்தைப் பேணுதல்

- உங்கள் நலத்திற்கு நீங்களே செலவிடும் “யு. எஸ் மாதிரித் திட்டத்தினை“ நாடும் ஏர்னிஈவ்ஸின் முயற்சியினை நீக்கி விடுதல்.
- வைத்தியக் கலாநிதிகளின் தொகையினைக் கூட்டி மேலும் விசேடமான குடும்ப சுகக் கவனிப்பை அளித்தல்.
- வெளிநாட்டு பயிற்சி பெற்ற மருத்துவ கலாநிதிகளுக்கு அனுமதி அளித்தல்.
- மருத்துவ மனையில் காத்திருக்கும் காலத்தினைச் சுருக்குதல்.
- மேலும் 8000 தாதிகள்
- **Tory** (பழமை சார்புக் கட்சியினரின்) தனியார் மருத்துவமனைச் செலவு அதிகரிப்பினை மீளப் பெறுதல்.

Liberal ONTARIO



அரசாங்கத்தினை மறுசீரமைப்புச் செய்யவும் எங்களது சனநாயக தாபனங்களில் நம்பிக்கையினை மீண்டும் புதுப்பிக்கவும் ஒன்றாறியோ லிபரல் கட்சியினர் ஒரு திட்டத்தை வைத்திருக்கின்றனர். நாங்கள் மக்களை (பிரஜைகளை) அரச நடைமுறையில் ஈடுபடச் செய்து அவர்களை முழுமையாகவும் நீதியாகவும் வெளிப்படையாகவும் **Queen’s Park** இல் பிரதிநிதித்துவம் செய்வோம். நாங்கள் ஒன்றாறியோ மக்கள் அனைவரது நலனுக்காகவும் உழைப்போம்.

## அரசாங்கம்

### உங்களுக்காக உழைக்கும் அரசு

- அரசு தனது சுய இலாபங்களுக்கு ஆதரவு தேடும் பிரசுரங்களைத் தடை செய்தல்.
- நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நிர்ணயிக்கப் பெற்ற திகதிக்லில் தேர்தல்.
- அரசியலுக்காக அறவிடும் - செலவிடும் பணத்திற்குக் கட்டாயமான எல்லை அமைத்தல்
- உங்கள் பிரதிநிதிகள் தன்னிச்சையாக வாக்களிக்கும் உரிமை
- ஒன்றாறியோவினது பல்லின மக்களை மதித்து ஆதரவு அளித்தல்.
- வீண் விரயங்களை ஒழிக்க மாகாண தணிக்கையாளர்களுக்கு கூடிய அதிகாரம் வழங்குதல்.

Liberal ONTARIO

## தாங்க இயலுமானது - பொறுப்பு மிக்கது

*“உங்களது புதுச் செயல் முறைத் திட்டத்தினை வரி வரியாக நான் 70 மணித்தியாலங்களுக்கு மேல் செலவிட்டு மதிப்பாய்வு செய்தேன். உங்களது செலவு மதிப்பீட்டினை உறுதி செய்துள்ளேன். அவற்றில் தீர்க்கப்படாத நிகழ்ச்சியோ மதிப்போ இல்லை”*

**Jack Marmer,** C.A., C.G.A., C.F.E.
Forensic Accountant

*“செயல் முறை நிகழ்ச்சி நிரலின் விவாங்களை ஆராய்ந்த பின்னர் அது எங்கள் மாகாணத்தில் அமுல் படுத்தப்படக் கூடிய திட்டம் என நம்புகின்றேன்”.*

**Warren Jestin,** Ph.D.
Chief Economist, Scotiabank

*“உங்களது அரசிறை வரும்படித் திட்டம் - ஆகக் குறைந்தளவில் சமநிலையான வரவு செலவுத் திட்டத்தினையும் அறிவு நுட்பம் வாய்ந்த கையிருப்பினையும் வழங்கும் என்பது எனது தொழில் அனுபவக் கருத்தாகும்”.*

**David Hall,** M.A.
Principal, Vista Economics

## ஒன்றாறியோ லிபரல் கட்சியினது மாற்றத்திற்கான திட்டம்

நீங்கள் விரும்புவதும் உங்களுக்கு உரித்தானதுமான ஒன்றாறியோவினைக் கட்டியெழுப்ப ஒரு முன்னேற்றமான நன்கு சிந்தித்து அமைத்த நிகழ்ச்சி நிரலை சென்ற ஓராண்டுகாலமாக எனது கட்சி தயாரித்துள்ளது.

எங்களது திட்டம் பொறுப்பு வாய்ந்த, படிப்படியாக நிகழும் தாங்க இயலுமான திட்டம்.

மேற் கூறப்பட்ட ஒவ்வொரு செயலும் செலவு கணிக்கப் பெற்று சார்பற்ற நிபுணர்களால் உறுதி செய்யப் பெற்றுள்ளது.

எங்களது திட்டத்தினை ஆராய்ந்த பின் மாற்றத்திற்திற்கு இது தருணமா இல்லையா என்று நீங்களே உங்களைக் கேளுங்கள். ஒரு மாற்றத்திற்காக உங்களுக்காக உழைக்கும் அரசினைத் தேர்ந்தெடுங்கள்.

**Dalton McGuinty**
**தலைவர் ஒன்றாறியோ லிபரல் கட்சி**

## ஒன்றாறியோ லிபரல் கட்சியினது மாற்றத்திற்கான திட்டம்



Liberal ONTARIO